# பதவிசிறிபுர பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மே 05 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஏப்ரல் 17 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பதவிசிறிபுர பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவிசிறிபுர பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபைக்குரிய கணனிகளது பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்களின் கீழ் 09 சொத்துக்கள் காட்டப்படாததுடன் 06 சொத்துக்களது பெறுமதி ரூபா 2,507,200 ஆகவுமிருந்தது.

(இ) நிதிசார் கூற்றுக்களில் காணப்படும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளது மீதி மற்றும் நிலையான சொத்துப் பட்டோலை மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 7,836 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) ரூபா 300,000 பெறுமதியான நிலையான வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) ஊழியர் கடன் பேரேடு 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சமனாக்கப்படவில்லை. ரூபா 1,738,600 க்கான ஊழியர் கடன் மீதிகளை உறுதிசெய்வதற்கான கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 186,388 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 689,530 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

ஐந்து செலவின விடயங்களிற்கான நிதியேற்பாடு முடிவடைந்த பின்னரும் முறையாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாது செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன கீழே காணப்படுகின்றன.

| | | 2011 | | |
|---|---|---|---|---|
| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 44 | 44 | - |
| (ii) | குத்தகை வாடகை | 385 | 360 | 96 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 178 | 198 | 36 |
| (iv) | பிற வருவாய் | 2,127 | 2,270 | 254 |

## 2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ)

(i) ஓராண்டிற்கு மேலான வருமானக் கடன்பட்டோர் மீதிகள் நான்கினது ரூபா 128,219 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) சபை வழங்கிய முற்பணமாகிய ரூபா 160,653 ஓராண்டைக் கடந்துவிட்டபோதும், அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) சபை வைப்புப் பதிவேடு ஒன்றைப் பேணவில்லை. ஆகவே, நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட நானாவித வைப்பு மீதியாகிய ரூபா 849,792 உறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(ஆ) வடக்கு கிழக்கு மாகாண சேகைள் மேம்பாட்டுச் செயற்திட்டத்திற்கு (NELSIP) 2011 மே மாதத்தில் ரூபா 14,565,000, 2011 டிசெம்பர் மாதத்தில் ரூபா 13,756,992 என மொத்தமாக ரூபா 28,321,992 பெறப்பட்டிருந்தபோதும், 2011 டிசெம்பர் 31 அன்றும் நிர்மாண வேலை எதுவும் ஆரம்பிக்கப்படாதிருந்தது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்